# சங்கீதம் 15, 16

## சங்கீதம் 15

1. கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த
பர்வதத்தில் வாசம்பண்ணுவான்?
2. உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச்
சத்தியத்தைப் *(வேதத்தை)* பேசுகிறவன்தானே.
3. அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்குசெய்யாமலும்,
தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்.
4. ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன் *(இழிவானவன்)*; கர்த்தருக்குப்
பயந்தவர்களையோ கனம்பண்ணுகிறான்; ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம்
வந்தாலும் தவறாதிருக்கிறான்.
5. தன் பணத்தை வட்டிக்குக்கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு
விரோதமாய்ப் பரிதானம் *(லஞ்சம்)* வாங்காமலும் இருக்கிறான். இப்படிச்
செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை.

## சங்கீதம் 16

1. தேவனே, என்னைக் காப்பாற்றும், உம்மை நம்பியிருக்கிறேன். *(அடைக்கலம்)*
2. என் நெஞ்சமே, நீ கர்த்தரை நோக்கி: தேவரீர், என் ஆண்டவராயிருக்கிறீர், என்
செல்வம் உமக்கு வேண்டியதாயிராமல்,
3. பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும், நான் என் முழுப் பிரியத்தையும்
வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்கும்*(புனிதர்களுக்கும்)*, அது வேண்டியதாயிருக்கிறது எ
ன்று சொன்னாய்.
4. அந்நியதேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும்; அவர்கள்
செலுத்துகிற இரத்த பானபலிகளை நான் செலுத்தமாட்டேன், **அவர்கள் நாமங்களை
என் உதடுகளினால் உச்சரிக்கவுமாட்டேன்.**
5. கர்த்தர் என் சுதந்தரமும் *(உரிமைச் சொத்து)* என் பாத்திரத்தின்
பங்குமானவர் *(என்னுடைய சொத்தில் அவருக்குப் பங்கு உண்டு)*; என் சுதந்தரத்தை *(அவருடைய
சொத்தில் எனக்கு உரிமை உண்டு)* தேவரீர் காப்பாற்றுகிறீர்.
6. நேர்த்தியான *(மகிழ்ச்சியான)* இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது; ஆம்,
சிறப்பான சுதந்தரம் *(உரிமை)* எனக்கு உண்டு.
7. எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன்; இராக்காலங்களிலும் என்
உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும். *(இரவில் கூட என் இருதயம் எனக்கு அறிவுரை
கூறுகின்றது)*


Copyright © SARC Ministries All Rights Reserved.

8. கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை.
9. ஆகையால் என் இருதயம் பூரித்தது, என் மகிமை களிகூர்ந்தது; என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும்.
10. என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்.
11. ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.

## Psalms 15

1. Lord, who shall abide in thy tabernacle? who shall dwell in thy holy hill?
2. He that walketh uprightly, and worketh righteousness, and speaketh the truth *(commandments of God)* in his heart.
3. He that backbiteth not with his tongue, nor doeth evil to his neighbour, nor taketh up a reproach against his neighbour.
4. In whose eyes a vile person is contemned; but he honoureth them that fear the Lord. He that sweareth to his own hurt, and changeth not.
5. He that putteth not out his money to usury, nor taketh reward *(bribe)* against the innocent. He that doeth these things shall never be moved.

## Psalms 16

1. Preserve me, O God: for in thee do I put my trust. *(refuge, surrender)*
2. O my soul, thou hast said unto the Lord, Thou art my Lord: my goodness extendeth not to thee;
3. But to the saints that are in the earth, and to the excellent *(Saints)*, in whom is all my delight.
4. Their sorrows shall be multiplied that hasten after another god: their drink offerings of blood will I not offer, nor take up their names into my lips.
5. The Lord is the portion *(my property, my possessions)* of mine inheritance and of my cup *(Christ has full rights over me and my properties)*: thou maintainest my lot. *(I have full rights over his properties)*
6. The lines are fallen unto me in pleasant places *(enjoyable)*; yea, I have a goodly heritage *(possession, rights)*.
7. I will bless the Lord, who hath given me counsel: my reins also instruct me in the night seasons.


Copyright © SArc Ministries All Rights Reserved.

8. I have set the Lord always before me: because he is at my right hand, I shall not be moved.
9. Therefore my heart is glad, and my glory rejoiceth: my flesh also shall rest in hope.
10. For thou wilt not leave my soul in hell; neither wilt thou suffer thine Holy One to see corruption.
11. Thou wilt show me the path of life: in thy presence is fulness of joy; at thy right hand there are pleasures for evermore.

SARC Ministries



Copyright © SARC Ministries All Rights Reserved.